DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | மதுராஜ ரெட்டி |
| Father's Name | : | அனுமரெட்டி |
| Village | : | கொல்லபள்ளி |
| Taluk | : | பெங்களுரு |
| District | : | பெங்களுரு |
| Profession | : | காண்ட்ராக்ட் (வீடு) |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 15th day of November 2024.

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது கர்நாடகா மாநிலம், எலக்ட்ரானிக் சிட்டி அஞ்சல், கொல்லபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வீடு கட்டும் காண்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 2020 ஆம் வருடம் காலை சுமார் 09.00 முதல் 10.00 மணிக்குள் நானும் கோபாலும் வேணுகோபால், ஜெகதீஷ், விநாயகம் ஆகியோர் வேணுகோபாலின் வெள்ளை நிற வெர்னா காரில் பெங்களுருவில் இருந்து அஞ்செட்டி வந்துக் கொண்டிருந்தோம். அஞ்செட்டிக்கும் தேன்கனிக்கோட்டைக்கும் இடையே உள்ள ghat section இல் வந்து கொண்டிருக்கும் போது இரு சக்கர வாகனத்தில் காருக்கு முன்பே நிறுத்தி வாகனத்தை ஏன் வேகமாக ஓட்டி வருகிறீர்கள் என்று அடிக்க வந்தார்கள். இது சம்பந்தமாக அஞ்செட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். தற்போது

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் காலி பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தேன். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை கையெழுத்து போட்டு விட்டு போக சொன்னார்கள். புகார் குறித்து பார்த்துக் கொள்வதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

உங்களை எதிரிகள் மறித்து மிரட்டியதாக சொல்லப்பட்ட இடம் குங்குமாரணப்பள்ளி செக் போஸ்ட் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வந்தவர்கள் அவர்களை போலீசார் என்றும், காருக்கான ஆவணங்களை கொடுங்கள் என்றும் சொன்னார்கள் என்றால் சரியல்ல. வந்த இருவரில் ஒருவர் காக்கி நிற பேண்டும், மற்றொருவர் லுங்கியிலும் இருந்தார் என்றால் சரியல்ல, இரண்டு பேருமே பேண்ட்டில் தான்இருந்தார்கள். சம்பவ தினத்தன்று பணம் ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்று கத்தியைக் காட்டி மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. உங்களை மிரட்டியவர்களின் இரு சக்கர வாகனத்தை உங்களுடன் வந்த ஜெகதீஷன் என்பவர் செல்போன் மூலம் புகைப்படம் எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தினம் 28.01.2020 ஆனால் நீங்கள் புகார் கொடுத்த தேதி 12.02.2020 என்றால் சரியல்ல, சம்பவத்தன்றே புகார் கொடுத்தோம். உங்கள் புகார் வாக்குமூலத்திலேயே முதலாம் எதிரியின் பெயர் மற்றும் அவர் பணிபுரியும் காவல் நிலையம் முதற்கொண்டு விவரங்களை சொல்லி தான் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. போலீஸ் விவசாரணையில் இரண்டாம் எதிரி ஒன்றாம் எதிரியின் உறவினர் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஒசூர் கனம் குற்றவியல் நீதிமன்றம் - 2 இன் நீதித்துறை நடுவர் முன்பாக கு.வி.மு.ச. பிரிவு 164 இன் கீழ் எதிரிகள் குறித்தும் சம்பவம் குறித்தும் தெளிவாக வாக்குமூலம் கொடுத்துள்ளீர்கள் என்றால் நான் கொடுத்ததாக ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த 28.01.2020 ஆம் தேதி உங்களை கத்தி காட்டி மிரட்டிய ஆயுதம் வழக்கு சொத்தாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதையும் நீங்கள் தான் அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. கடந்த 28.01.2020 ஆம் தேதியன்று நடைபெற்ற சம்பவத்தை ஒட்டி

12.02.2020 ஆம் தேதி அஞ்செட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்து, அது சம்பந்தமாக சம்பவ இடத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டி எதிரியைப் பற்றி அவர் செய்யும் வேலையை பற்றி தெளிவாக புகாரில் குறிப்பிட்டு விட்டு நீதிமன்றத்தில் அதன் தொடர்ச்சியாக வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் நான் அவர்களை பார்த்ததில்லை. காவல் நிலையத்தில் வைத்து வெள்ளை தாளில் கையெழுத்து செய்த பிறகு போலீசார் உங்களை விசாரிக்கவே இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,

KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | கோபால் |
| Father's Name | : | பாலப்பா |
| Village | : | கொள்ளபள்ளி |
| Taluk | : | பெங்களூரு |
| District | : | பெங்களூரு |
| Profession | : | மளிகை கடை வியாபாரம் |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 15th day of November 2024.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது கர்நாடக மாநிலம், எலக்ட்ரானிக் சிட்டி அஞ்சல், கொள்ளப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். மாளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மதுராஜ ரெட்டியை எனக்கு தெரியும், அவர் எனது நண்பர் ஆவார். கடந்த 28.01.2020 அன்று காலை சுமார் 09.00 மணியளவில் எலக்ட்ரானிக் சிட்டியில் இருந்து அஞ்செட்டி செல்வதற்காக வெள்ளை நிற காரில் வந்து கொண்டிருந்த போது காட்டுப்பகுதியில் இரண்டு நபர்கள் வந்து பணம் வேண்டும் என்று மிரட்டி, கத்தியை எடுத்து காட்டினர். நாங்கள் பணம் இல்லை என்று சொன்னோம். பிறகு அவர்கள் சென்று விட்டார்கள், நாங்கள் அஞ்செட்டி சென்று விட்டோம். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 இது சம்பந்தமாக அஞ்செட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது

தான். என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை நான் புகார் கொடுத்து நான்கு, ஐந்து நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் வைத்து போட்டுக் கொடுத்தேன். நான் மட்டும் தான் கையெழுத்து போட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவத்தன்று நீங்கள் பயணம் செய்த கார் வெள்ளை கலர் வெர்னா கார் என்றால் சரிதான். காலை 09.00 மணிக்கு நாங்கள் புறப்பட்டு 10.00, 10.30 மணி அளவில் இந்த சம்பவம் நடந்தது என்றால் 08.30 மணிக்கு கிளம்பினோம், 10.00, 10.30 அளவில் சம்பவம் நடந்தது. மேற்படி கார் கர்நாடகாவில் பதிவு செய்யப்பட்ட வாகனம் என்றால் சரிதான். இரண்டு பேர் இரு சக்கர வாகனத்தில் வந்து குங்குமாரணபள்ளி அருகே வந்து உங்களை வழிமறித்தார்கள் என்றால் சரிதான். கத்தியைக் காட்டி மிரட்டி பணம் ரூ.20,000/- கொடுக்கும் படி கேட்டார்கள் என்றால் சரிதான். நீங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு ரூ.10,000/- பணத்தை அவர்களிடம் கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அதன் பிறகு தான் அஞ்செட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நான்கு, ஐந்து நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். புகார் கொடுத்த அன்றே மேற்படி சம்பவம் நடந்த இடத்தில் வைத்து தான் அ.சா.ஆ.2 கையெழுத்தை செய்து கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த நீங்கள் தான் சம்பவ இடத்தையும், போலீசாருக்கு அடையாளம் காட்டினீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் நீங்களும், வேணுகோபாலும் பார்வை மகசரில் கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று எதிரிகள் தான் உங்களை வழிமறித்து பணம் கேட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியும் என்றும், அவர்கள் எங்கு வேலை பார்த்தார்கள் என்ற விவரத்தையும் தெளிவாக புகாரிலேயே குறிப்பிட்டு விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

காவல் நிலையத்தில் வெள்ளை தாளில் போலீசார் கேட்டுக்

கொண்டதன் பெயரில் தான் கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரிதான்.புகார் கொடுத்த பிறகு போலீசார் எதுவும் உங்களை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.